சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று (09.09.2025) நடைபெற்ற விழாவில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு வனத் துறையில் புதிதாகப் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, கடல்சார் வள அறக்கட்டளை (Marine Resources Foundation MRF) மற்றும் மணலி எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிர் அமைப்பு மன்றம் (Manali Ennore Restoration and Rejuvenation Council MERRC) ஆகியவற்றை தொடங்கி வைத்து, மஞ்சப்பை விருதுகள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹூ, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத் முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும்வனத்துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம். ஜெயந்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 202 வது நாள்!

துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,செப்.10- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 202 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (09.09.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி, வட்டம் 60 அ, அன்னை சத்யா நகர், பி.சி பகுதி. 2) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 54 பி. கே.ஜி தெருவில், நான்காவது சந்து அண்ணா பிள்ளைத்தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ்

துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன்.

ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! குன்றத்தூர் வடக்கு ஒன்றிய

மாவட்டப் பிரதிநிதி எஸ்.சந்தானம்-கலாவதி இல்லத் திருமணம்!

டி.ஆர்.பாலு எம்.பி.– ஆர்.எஸ்.பாரதி - கழகத்தினர் வாழ்த்துரை!

சென்னை, செப். 10 - குன்றத்தூர் வடக்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி எஸ். சுதர்சனம் - பரணி புத்தூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கலாவதி சந்தானம் ஆகியோரின் புதல்வர் எஸ். ஜெயகுமார் (எ) பிரேம்குமாருக்கும், மாங்காடு கே. பாபு - செல்வி ஆகியோரின் புதல்வி பி. ஷாலினிக்கும் திருமணம் நாளை (11.09.2025 - வியாழக் கிழமை) காலை 7.30 மணியளவில் குன்றத்தூர் மெயின் ரோடு, கோவூரில் உள்ள தனலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு இன்று (10.09.2025 - புதன்) மாலை 6.30 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை வகிக்கிறார்.

இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., ஆர்.எஸ். பாரதி, மீ.அ.வைதியலிங்கம், ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., படப்பை ஆ. மனோகரன், ஏ. வந்தே மாதரம், சரஸ்வதி மனோகரன், உமா மகேஸ்வரி வந்தே மாதரம், இ. மணி, கோ. சத்தியமூர்த்தி, எஸ். ஜபருல்லா, கே.எத்திராஜ், எம்.ஆர். சீனிவாசன், திரைப் பட நடிகர் ரமேஷ் கண்ணா ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் து. சுந்தர், பொன். ஜீவா, கே. வசீகரன், பூங்கொடி அரசு, எஸ். ராஜா தேசிங்கு, பா. ராஜேந்திரன், எஸ்.கே.துளசிங்கம், த.க. பாஸ்கரன், டி.எஸ். எம்.ஜெயகரன், டி.ஆர். சாரதி பெரிய நாயகம், ப. குமரவேல், தா. அன்பழகன், தமிழசி சுரேஷ், சுலைமான் சையத், சு. ஜனார்த்தனன், ரா. நவீன்ராஜ், வெ.கவிபாரதி,

கு. பிரவீன்குமார், கு. தமிழ்வாணன், செ. இமான் (எ) கௌதம், செ. அரிபிரகாஷ், ப. சிலம்பரசன், ர.பிரபு, வெ. வசந்தகுமார், ரா. அரிபாபு, து. நாராயணன், மகேஸ்வரி, பா. காமாட்சி, ஜோஸ்பின் கிளாரா, தி. சுகுணா, ஜெ. ஜெயஸ்ரீ, எம். ஆனந்தி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இம்மணவிழாவிற்கு வருகை தருவோரை கௌரி தாமோதரன், சி. பாண்டியன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

துணை மேயர் மு.மகேஷ்குமார், அடையாறு மண்டலம் வார்டு169ல் சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் உள்ள சமுதாயக்கூடத்தில் நேற்று (09.09.2025) நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களின் கோரிக்கைகளுக்கான தீர்வுகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, மண்டல அலுவலர் ஹார்டின் ரோசாரியோ மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று (09.09.2025) சென்னை மருத்துவக்கல்லூரி மற்றும் இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் முடநீக்கியல் மற்றும் விபத்தியல் நிலையம் 16 ஆம் ஆண்டு விழாவினை தொடங்கி வைத்து, ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து, முன்னாள் நிறுவன இயக்குநர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர். இந்நிகழ்வில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. சாந்தாராமன், துறைத்தலைவர் மரு.தொல்காப்பியன், முன்னாள் நிறுவன இயக்குநர் மரு.மயில்வாகணன் நடராஜன், மரு.செல்வராஜ் மற்றும் மருத்துவ பேராசிரியர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் முடக்கியில் – விபத்தியல் நிலையம் 16 ஆம் ஆண்டு விழா!

ரூ.1.35 கோடி மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்! நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, செப்.10- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (09.09.2025) சென்னை மருத்துவக்கல்லூரி மற்றும் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் முடநீக்கியல் மற்றும் விபத்தியல் நிலையம் 16 ஆம் ஆண்டு விழாவினை தொடங்கி வைத்து, ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து, முன்னாள் நிறுவன இயக்குநர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர்.

பிறகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆற்றிய உரை வருமாறு:

முடநீக்கியல் மற்றும் விபத்தியல் நிலையம் 16 வது நிறுவன நாள்

சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.75 இலட்சம் செலவில், சென்னை உயர்நீதிமன்றத்தின் நிர்வாக தலைவர் மற்றும் அதிகாரப்பூர்வ அறங்காவலர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட சிக்கலான முதுகெலும்பு அறுவை சிகிச்சை நரம்பணு கண்காணிப்பு கருவி (Intraoperative Neuromonitor for complex spine surgeries) தொடங்கப்பட்டது. மேலும் ரூ.60 இலட்சம் செலவில் மூட்டு உள் நோக்கி அறுவை சிகிச்சை கருவி (Arthroscopy Set for Sports Injuries) தொடங்கப்பட்டது. இன்று சென்னை மருத்துவ கல்லூரி எலும்பியல் துறை முன்னாள் மாணவர் சங்க சட்ட விதிகள் கொண்ட பிரதி வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை மருத்துவ கல்லூரியில் எலும்பியல் மருத்துவ சேவை

1929 ஆம் ஆண்டு புற நோயாளிகள் சேவை தொடங்கப்பட்டது.

1931 இல் உள்நோயாளிகள் சேவை தொடங்கப்பட்டது. 1949 இல் லெப்டினன்ட் கர்னல் வி ஆர் தாயுமான சுவாமி எலும்பியல் அறுவை சிகிச்சை துறையின் முதல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 09.09.2009 ஆம் ஆண்டு சென்னை மருத்துவ கல்லூரி மற்றும் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் எலும்பியல் முறிவு மருத்துவத்துறையானது எலும்பியல் மற்றும் விபத்தில் உயர்கல்வி நிறுவனமாக தரம் உயர்த்தப்பட்டு, முதல் இயக்குநராக முனைவர் திரு.மயில்வாகணன் நடராஜன் அவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு, தற்போது 16 ஆண்டுகளாக சிறப்பான முறையில் முடவாத மற்றும் எலும்பு முறிவு நலனுக்காகச் செயல்பட்டு கொண்டிருக்கிறது. இந்நிறுவனத்தில், எலும்பியலின் பல்வேறு சார்துறைகளான மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, மூட்டு உள்நோக்கி அறுவை சிகிச்சை, எலும்பு புற்று நோய்க்கான தனிப்பெரும் சிகிச்சை, முதுகெலும்பியல் உயர் சிகிச்சை, கணுக்கால் மற்றும் பாதவலி சிகிச்சை சிறப்பு பிரிவு ஆகியவை செயல்படுகின்றன.

இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை

இம்மருத்துவமனை 1664 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இம்மருத்துவமனையின் பரப்பளவு 28.8 ஏக்கர், 12,54,528 சதுரடி கொண்டு இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையின் மொத்த படுக்கை வசதிகள் 3,707, மொத்த பிரிவுகள் 68. மேலும் இம்மருத்துவமனையின் புறநோயாளிகள் நாளொன்றுக்கு 6,564 பேர் வருகை புரிகின்றனர். மேலும் உள்நோயாளிகள் நாளொன்றுக்கு 2,225 பேர் மருத்துவ பயன் பெறுகின்றனர்.

இம்மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள்

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரியில் ரூ.74.50 கோடி செலவில் பல்வேறு கட்டிடங்கள், பிரிவுகள் மற்றும் உயர் மருத்துவ உபகரணங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 14.04.2022 அன்று ரூ.1.69 கோடி மதிப்பீட்டில் அவசரகால சிகிச்சை மையம் திறந்து வைக்கப்பட்டது. மேலும் ரூ.29.93 கோடி செலவில் இம்மருத்துவமனையில் தொற்றுநோய் மற்றும் சுவாச அவசர மற்றும் தீவிர பராமரிப்பு வசதிகளுக்கான பிரிவு தொடங்கி வைக்கப்பட்டது. ரூ.49.85 இலட்சம் செலவில் இம்மருத்துவமனையில் மருத்துவர் ஓய்வு அறை, சிறப்பு சிகிச்சை பிரிவு, உட்பட பல்வேறு வசதிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. ரூ.6.15 கோடி செலவில் சிறுநீரக அறுவை சிகிச்சை துறையில் நவீன மருத்துவ உபகரணங்கள், இன்டிரா வாஸ்குலர் அல்ட்ரா சவுண்ட் கருவி, நாற்பரிணாம எக்கோ கருவி மற்றும் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூ.9.83 கோடி செலவில் கதிரியக்க அலைவீச்சு கருவி மற்றும் மின்தூக்கிகள் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூ.2.84 கோடி செலவில் இரத்த நாள அறுவை சிகிச்சை உயர் சிறப்பு நிலையம், தன்னியக்க நரம்பு மண்டல ஆய்வகம் இருதய நோய் சிறப்பு பரிசோதனை மற்றும் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூ 1.71 கோடி செலவில் சென்னை மருத்துவக் கல்லூரியில் நவீன சமயலறை, பல்வகை கைபேசி மின்னேற்ற நிலையம் பட்டமேற்ப டிப்பு மருத்துவ மாணவர்கள், தங்கும் அறை, வண்ண படுக்கை விரிப்புகள் மற்றும் நோய் தகவல் ஏடுகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரூ.14.56 கோடி மதிப்பீட்டில் மூளை இரத்தம் சார் கேத் ஆய்வகம் மற்றும் உயர் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. ரூ.61.40 இலட்சம் செலவில் உள் நோயாளி உள்நகர்வு வசதி வாகனங்கள் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூ.2.76 கோடி செலவில் கோபால்ட் கருவி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூ.42 இலட்சம் செலவில் இம்மருத்துவமனையில் Radio Frequency ablation machine போன்றவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூ.3.49 கோடி செலவில் செவித்திறன் ஆய்வகம், நீரிழிவு நோய் சிறப்பு மையம் மற்றும் Teen Clinic மற்றும் ரூ.82 ஆயிரம் செலவில் Zero delay Chest Pain Clinic போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதோடு ரூ.132.24 கோடி செலவில் சென்னை மருத்துவக்கல்லூரியில் 2,53,543 சதுரடி பரப்பளவில் 15 தளங்களுடன் முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கான விடுதி கட்டிடம் 8 ஆம் தள மேற்கூரை போடப்பட்டுள்ளது. ரூ.65 கோடி செலவில் 1,12,246 சதுரடி பரப்பளவில், 4 தளங்கள் கொண்ட நரம்பியல் துறை கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விழாப் பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. சாந்தாராமன், துறைத்தலைவர் மரு.தொல்காப்பியன், முன்னாள் நிறுவன இயக்குநர் மரு.மயில்வாகணன் நடராஜன், மரு.செல்வராஜ் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் கொல்லாலகுப்பம் கிராமத்தில் கிளைக் கழக கூட்டம் நடைபெற்றது இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. கலந்துகொண்டு கழக வளர்ச்சிப் பணிகளை குறித்து ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தமைக்கு நன்றி தெரிவித்து வருகின்ற சட்டமன்ற தேர்தலில் கழக தலைவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்திட இரவும் பகலும் பாராமல் அயராத உழைப்பும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இதில் ஒன்றிய செயலாளர் சி. ஜே. சீனிவாசன், தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், ஒன்றிய செயலாளர் சி.ஜே.செந்தில் குமார், ஒன்றிய அவைத்தலைவர் திருமலை லோகநாதன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் தண்டபாணி, மற்றும் கிளை கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.